# பிராமணர் என்றால் சதா சிரேஷ்ட பாக்கியத்திற்கு அதிகாரி

இன்று பாக்கியவிதாதா பாப்தாதா தம்முடைய குழந்தைகள் அனைவரின் சிரேஷ்ட பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். இவ்வளவு சிரேஷ்ட பாக்கியம் மற்றும் இவ்வளவு சுலபமாகப் பிராப்தியாகிறது அந்த மாதிரி பாக்கியம் முழுக் கல்பத்திலும் பிராமணக் குழந்தைகளாகிய உங்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் மட்டுமே இந்த பாக்கியத்துக்கு அதிகாரியாக இருக்கிறீர்கள். கல்பத்திற்கு முந்தைய பாக்கியத்தின் அனுசாரம் தான் இந்த பாக்கியம் கிடைத்துள்ளது. ஜென்மமே சிரேஷ்ட பாக்கியத்தின் ஆதாரத்தில் உள்ளது, ஏனென்றால் பிராமண ஜென்மம் சுயம் பகவான் மூலம் கிடைக்கிறது. அநாதி தந்தை மற்றும் ஆதி பிரம்மா மூலம் இந்த அலௌகிக ஜென்மம் கிடைத்துள்ளது. ஜென்மமே பாக்கிய விதாதா மூலம் கிடைத்துள்ளது என்றால் அந்த ஜென்மம் எவ்வளவு பாக்கியவான் ஆகிறது! தனது இந்த சிரேஷ்ட பாக்கியத்தை சதா நினைவில் வைத்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறீர்களா? சதா நினைவு பிரத்தியட்ச சொரூபத்தில் இருக்க வேண்டும், சதா மனதில் வெளிப்படுத்துங்கள். வெறுமனே புத்தியில் நிறைந்துள்ளது என்று அந்த மாதிரி இல்லை. ஆனால் ஒவ்வொரு நடத்தை மற்றும் முகத்தில் ஸ்மிருதி-சொரூப பிரத்தியட்ச ரூபத்தில் தனக்கு அனுபவம் ஆக வேண்டும் மற்றும் மற்றவர்களுக்கும் கூடக் காணப்பட வேண்டும் - அதாவது இவர்களின் நடத்தையில், முகத்தில் சிரேஷ்ட பாக்கியத்தின் ரேகை தெளிவாகக் காணப் படுகிறது. எத்தனை விதமான பாக்கியம் கிடைத்துள்ளது, அதன் பட்டியல் சதா நெற்றியின் மீது தெளிவாகக் காணப்பட வேண்டும். வெறுமனே டயரியில் அந்தப் பட்டியல் இருந்தால் போதாது. ஆனால் நெற்றியின் நடுவில் பாக்கியத்தின் ரேகை ஒளி வீசிக் காணப்பட வேண்டும்.

முதல் பாக்கியம் - ஜென்மமே பாக்கிய விதாதா மூலமாக நிகழ்ந்துள்ளது. இரண்டாவது விஷயம் - எப்படி சுயம் பகவான் ஒருவரே தந்தையாகவும் உள்ளார், ஆசிரியராகவும் உள்ளார், மற்றும் சத்குரு வாகவும் உள்ளாரோ, அது போல் எந்த ஓர் ஆத்மா அல்லது தர்மாத்மா அல்லது மகான் ஆத்மாவிற்கும் பாக்கியம் கிடையாது. முழுக் கல்பத்திலும் அது போல் யாராவது இருக்கிறாரா? ஒரே ஒருவர் மூலமாகத் தந்தையின் சம்பந்தத்தால் ஆஸ்தி கிடைக்கிறது, ஆசிரியர் ரூபத்தில் சிரேஷ்ட படிப்பு மற்றும் பதவி கிடைக்கிறது, சத்குரு ரூபத்தில் மகாமந்திரம் மற்றும் வரதானத்தின் பிராப்தி உள்ளது. ஆஸ்தியாக சர்வ கஜானாக்களுக்கான அதிகாரத்தை அடைந்திருக்கிறீர்கள். சர்வ கஜானாக்களும் உள்ளன இல்லையா? எந்தக் கஜானாவாவது குறைவாக உள்ளதா? கட்டடம் பெரியதாக இருக்க வேண்டும், நல்ல-நல்ல மாணவர்கள் வேண்டும், இந்தக் குறை உள்ளதா? இல்லை. எவ்வளவு சேவை நிர்விக்னமாக விருத்தியாகிறது என்றால் சேவையுடன் கூட சேவைக்கான சாதனங் களும் சகஜமாகவும் தானாகவும் அதிகரிக்கவே செய்கின்றன.

பாபாவிடமிருந்து ஆஸ்தி மற்றும் சிரேஷ்ட பாலனை கிடைத்துக் கொண்டிருக்கிறது. பரமாத்ம-பாலனை என்பது எவ்வளவு உயர்ந்த விஷயம்! பக்தியில் பாடுகின்றனர் -- பரமாத்மா பாலனை செய்பவர் என்று. ஆனால் பாக்கியவான் ஆத்மாக்கள் நீங்கள் ஒவ்வோரடியிலும் பரமாத்ம பாலனையின் மூலம் தான் அனுபவம் செய்கிறீர்கள். பரமாத்ம ஸ்ரீமத் தான் பாலனை. ஸ்ரீமத் இல்லாமல் அதாவது பரமாத்ம பாலனை இல்லாமல் ஓரடி கூட எடுத்து வைக்க முடியாது. அத்தகைய பாலனை இப்போது மட்டும் தான் கிடைக்கிறது. சத்யுகத்தில் கூடக் கிடைக்காது. அது தேவ ஆத்மாக்களின் பாலனை மற்றும் இப்போது பரமாத்ம பாலனையில் சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்போது பிரத்தியட்ச அனுபவத்திலிருந்து நீங்கள் சொல்ல முடியும் - எங்களுக்குப் பாலனை செய்பவர் சுயம் பகவான். நீங்கள் உள் நாட்டில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி, ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் பெருமிதத்துடன் சொல்வார்கள் -- எங்களை வளர்த்தெடுப்பவர் பரம ஆத்மா ஆவார். அவ்வளவு நஷா உள்ளதா? எப்போது மர்ஜ் ஆகி விடுகிறது, எப்போது இமர்ஜ் ஆகிறது? பிறவி எடுத்ததுமே எல்லையற்ற கஜானாக்களால் நிரம்பி அவிநாசி ஆஸ்திக்கு அதிகாரத்தைப் பெற்று விட்டீர்கள்.

அதோடு கூடவே பிறவி எடுத்ததும் திரிகாலதரிசி சத்தியமான ஆசிரியர், மூன்று காலங்களின் படிப்பை எவ்வளவு சகஜ விதி மூலம் கற்பித்துள்ளார்! எவ்வளவு சிரேஷ்டமான படிப்பு மற்றும் கற்பிப்பவரும் எவ்வளவு சிரேஷ்டமானவர்! ஆனால் யாருக்குக் கற்பித்திருக்கிறார்? யாரிடம் உலகத்திற்கு நம்பிக்கை இல்லையோ, அவர்களை நம்பிக்கைக்குரியவர்களாக ஆக்கியுள்ளார். கற்பித்தார் என்பது மட்டுமில்லை, ஆனால் படிப்பைப் படிப்பதற்கான லட்சியமே உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி பெறுவதாகும். பரமாத்ம படிப்பினால் என்ன சிரேஷ்ட பதவி பெற்றுக் கொண்டிருக் கிறீர்களோ, அத்தகைய பதவி, உலகத்தின் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவிக்கு முன்னால் எவ்வளவு சிரேஷ்டமானது! அநாதி சிருஷ்டிச் சக்கரத்தினுள் துவாபர யுகத்திலிருந்து தொடங்கி, இது வரையிலும் என்னென்ன அழியக்கூடிய பதவி கிடைத்ததோ, அவற்றுள் சர்வ சிரேஷ்ட பதவி முதலில் ராஜ்ய பதவி என்று பாடப் பட்டுள்ளது. ஆனால் உங்களுடைய ராஜ்ய பதவிக்கு முன்னால் அந்த ராஜ்ய பதவி என்பது என்ன? சிரேஷ்ட மானதா? தற்காலத்தின் சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமான பதவி ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி. பெரியதிலும் பெரிய படிப்பு மூலம் தத்துவஞானி ஆவார்கள், சேர்மன், டைரக்டர் முதலானவராக ஆவார்கள். பெரியதிலும் பெரிய ஆ ஃபீசர் ஆவார்கள். ஆனால் இந்தப் பதவிகள் அனைத்தும் உங்களுக்கு முன்னால் என்ன? உங்களுக்கு ஒரு ஜென்மத்தில் ஜென்ம-ஜென்மத்தின் சிரேஷ்ட பதவி கிடைக்கும் என்பதற்குப் பரமாத்ம-கேரண்டி உள்ளது. மற்றும் அந்த ஒரு ஜென்மத்தின் படிப்பு மூலம் ஒரு ஜென்மத்தில் கூடப் பதவி பெறுவதற்கான கேரண்டி எதுவும் கிடையாது. நீங்கள் எவ்வளவு பாக்கியவான்! - பதவியும் சர்வ சிரேஷ்டமானது மற்றும் ஒரு ஜென்மத்தின் படிப்பினால் அநேக ஜென்மங்கள் பதவியின் பிராப்தி. ஆகவே இது பாக்கியம் இல்லையா? முகத்தின் மூலம் அது காணப்படுகிறதா? நடத்தை மூலம் அது தென்படுகிறதா? ஏனென்றால் நடத்தை மூலம் மனிதர்களின் நிலைமை தெரிந்து விடும். அந்த மாதிரி நடத்தை உள்ளதா - உங்களுடைய இவ்வளவு சிரேஷ்ட பாக்கியத்தின் நிலை காணப்படுகிற அளவுக்கு? சாதாரணத் தன்மையில் மகான் தன்மை தென்பட வேண்டும் - ஏனென்றால் உங்கள் ஜட சித்திரங்கள் இது வரை கூட மகான் தன்மையின்

அனுபவம் செய்விக்கின்றன. இப்போதும் எந்த ஆத்மாவையாவது லட்சுமி-நாராயணர் அல்லது சீதா-ராம் அல்லது தேவிகளாக ஆக்கி விட்டால் சாதாரண மனிதரிலும் கூட மகான் தன்மையின் அனுபவம் செய்து தலைவணங்குகின்றனர் இல்லையா? அறிந்து கொண்டும் உள்ளனர் - இவர் உண்மையில் நாராயணர் அல்லது ராமர் முதலானவரோ கிடையாது, செயற்கை யான வேஷம் தான். பிறகும் கூட அச்சமயம் மகான் தன்மைக்கு முன் தலைவணங்குகின்றனர், வந்தனை, பூஜை செய்கின்றனர். ஆனால் நீங்களோ, சுயம் சைதன்ய தேவி-தேவதைகளின் ஆத்மாக்கள். சைதன்ய ஆத்மாக்களாகிய உங்கள் மூலம் எவ்வளவு மகான் தன்மையின் அனுபூதி ஏற்பட வேண்டும்! உங்களுடைய சிரேஷ்ட பாக்கியத்தை மனதால் நமஸ்காரம் செய்வார்கள், கையால் அல்லது தலையால் அல்ல. ஆனால் மனதால் உங்களது பாக்கியத்தின் அனுபவம் செய்து தாங்களும் குஷியில் நடனமாடுவார்கள்.

இவ்வளவு சிரேஷ்டமான படிப்பின் பிராப்தி சிரேஷ்ட பாக்கியமாகும். மக்கள் படிப்பைப் படிப்பதே வாழ்க்கையின் சரீர நிர்வாகத்திற்கான வருமானத்தை சம்பாதிப்பதற்காகத் தான். இது வருமானத் திற்கு ஆதாரம் எனச் சொல்லப் படுகிறது. உங்கள் படிப்பின் மூலம் வருமானத்தின் ஆதாரம் எவ்வளவு? மிகப்பெரும் செல்வந்தர் ஆகிறீர்கள் இல்லையா? உங்கள் வருமானத்தின் கணக்கு என்ன? அவர்களின் கணக்கு லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் இருக்கும். ஆனால் உங்களது கணக்கு என்ன? உங்களுக்கு எவ்வளவு வருமானம்? ஒவ்வோரடியிலும் பல கோடி மடங்கு. ஆக, நாள் முழுவதிலும் எத்தனை அடிகள் எடுத்து வைக்கிறீர்கள்? எவ்வளவு கோடி சேமிக்கிறீர்கள்? இவ்வளவு வருமானம் வேறு யாருக்காவது உள்ளதா? எவ்வளவு பெரிய பாக்கியம் உங்களுடையது! ஆக, இது போல் உங்களுடைய படிப்பின் பாக்கியத்தை இமர்ஜ் ரூபத்தில் அனுபவம் செய்யுங்கள். யாரிடமாவது கேட்டால் சொல்கிறார்கள் - பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரிகளாகவோ இருக்கத் தான் செய்கிறோம், ஆகியோ விட்டோம். ஆனால் பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரி என்றால் சிரேஷ்ட பாக்கியத்தின் ரேகை நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருப்பதாகக் காணப்பட வேண்டும். பிரம்மா குமார்- பிரம்மா குமாரியாகவோ இருக்கத் தான் செய்கிறோம், ஆனால் கிடைத்து விடும், ஏதோ ஆகிவிடத் தான் போகிறோம், சென்று கொண்டு தானே இருக்கிறோம், ஆகியோ விட்டோம் என்று அந்த மாதிரி இல்லை. ஆகி விட்டீர்களா அல்லது பாக்கியத்தைப் பார்த்துப் பறந்து கொண்டிருக் கிறீர்களா? இதில் ஆகியோ விட்டோம், ஆகிக் கொண்டு தான் இருக்கிறோம், சென்று கொண்டு தான் இருக்கிறோம் இந்தப் பேச்சு யாருடையது? சிரேஷ்ட பாக்கியவானின் பேச்சா இது? பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரி என்றால் மகிழ்ச்சியுடன் அன்பின் வாழ்க்கையை வாழ்பவர்கள். சில நேரம் நிர்பந்தம், சில நேரம் அன்பு என்று அந்த மாதிரி அல்ல. ஏதேனும் பிரச்சினை வரும் போது என்ன சொல்கிறீர்கள்? விரும்பவில்லை, ஆனால் நிர்பந்தமாகி விட்டது. பாக்கியவான் என்றால் நிர்பந்தம் முடிந்து விட்டது. அன்பினால் சென்று கொண்டிருப்பவர்கள். விரும்பவோ செய்கிறோம், ஆனால் இந்த மாதிரி பாஷை பாக்கியவான் பிராமண ஆத்மாக்களுடையது இல்லை. பாக்கியவான் ஆத்மாக்கள் அன்பின் ஊஞ்சலில் மகிழ்ச்சியுடன் பறந்து செல்வார்கள். பறக்கும் கலையின் மகிழ்ச்சியில் இருப்பார்கள். நிர்பந்தம் அவர்களுக்கு முன்னால் வர முடியாது. புரிந்ததா? தனது சிரேஷ்ட பாக்கியத்தை மறைத்து வைக்காதீர்கள்.

வெளிப்படையாக வையுங்கள்.

மூன்றாவது விஷயம் -- சத்குரு மூலம் என்ன பாக்கியம் கிடைத்தது? முதலிலோ மகாமந்திரம் கிடைத்தது. சத்குருவின் மகாமந்திரம் என்ன கிடைத்தது? பவித்திரமாகுங்கள், யோகி ஆகுங்கள். பிறவி எடுத்ததுமே இந்த மகாமந்திரம் சத்குரு மூலம் கிடைத்தது. இந்த மகா மந்திரம் தான் சர்வ பிராப்திகளுக்குமான சாவி, அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைத்துள்ளது. யோகி வாழ்க்கை, பவித்திர வாழ்க்கை தான் சர்வ பிராப்திகளுக்கான ஆதாரம். அதனால் இந்தச் சாவி. பவித்திரதா இல்லை, யோகி வாழ்க்கை இல்லை என்றால் அதிகாரியாக இருந்தும் அதிகாரத்தின் அனுபவம் செய்ய முடியாது. அதனால் இந்த மகா மந்திரம் சர்வ கஜானாக்களின் அனுபவத்திற்கான சாவி. அத்தகைய சாவியின் மகாமந்திரம் சத்குரு மூலம் சிரேஷ்ட பாக்கியமாகக் கிடைத்துள்ளது. அதோடு கூடவே சத்குரு மூலம் வரதானங்கள் கிடைத்துள்ளன. வரதானங்களின் பட்டியலோ மிக நீண்டது இல்லையா? எத்தனை வரதானங்கள் கிடைத்துள்ளன? இத்தனை வரதானங்களுக்கான பாக்கியம் கிடைத்துள்ளது - இந்த வரதானங்களால் தான் வாழ்க்கையையும் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் நடத்த முடியும். எத்தனை வரதானங்கள்! பட்டியல் பற்றித் தெரியுமா? ஆக, ஆஸ்தியும் உள்ளது, படிப்பும் உள்ளது, மகாமந்திரத்தின் சாவி மற்றும் வரதானங்களின் சுரங்கமும் உள்ளது. ஆகவே நீங்கள் எத்தகைய பாக்கியவான்! அல்லது மறைத்து வைத்திருக்கிறீர்களா - பிறகு கடைசியில் திறந்து கொள்ளலாம் என்று? நீண்ட காலமாக பாக்கியத்தின் அனுபவம் செய்பவர் கடைசியிலும் கூட பத்மாபதம் பாக்கியவானாகப் பிரத்தியட்சம் ஆவார்கள். இப்போது இல்லையென்றால் கடைசியிலும் இல்லை. இப்போது இருந்தால் கடைசியிலும் இருக்கும். சம்பூர்ணமாகவோ கடைசியில் தான் ஆவோம் என்று அந்த மாதிரி ஒரு போதும் யோசிக்காதீர்கள். சம்பூர்ண நிலையின் வாழ்க்கை யினுடைய அனுபவம் இப்போதிருந்தே ஆரம்பமாக வேண்டும். அப்போது கடைசியில் பிரத்தியட்ச ரூபத்தில் வருவீர்கள். இப்போது தனக்கு அனுபவமாக வேண்டும், மற்றவர்களுக்கு அனுபவம் ஆக வேண்டும், யார் சமீபமாக, தொடர்பில் வந்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அனுபவம் ஆக வேண்டும் மற்றும் கடைசியில் உலகத்தில் பிரத்தியட்சமாகும்.

பாப்தாதா இன்று குழந்தைகள் அனைவருடைய பாக்கியத்தின் சிரேஷ்ட ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாபா எவ்வளவு பாக்கியத்தைப் பார்த்தாரோ, அந்த அளவு குழந்தைகள் சதா அனுபவத்தைக் குறைவாகச் செய்கிறார்கள். பாக்கியத்தின் சுரங்கம் அனைவருக்கும் கிடைத்துள்ளது. ஆனால் சிலருக்குக் காரியத்தில் ஈடுபடுத்த வருகிறது, இன்னும் சிலருக்குக் காரியத்தில் ஈடுபடுத்த வருவதில்லை. எவ்வளவு ஈடுபடுத்த முடியுமோ, அவ்வளவு ஈடுபடுத்துவதில்லை. எல்லாருக்குமே ஒரே மாதிரி தான் கிடைத்துள்ளது. ஆனால் கஜானாவைக் காரியத்தில் ஈடுபடுத்தி, பாபாவின் கஜானாவைத் தனது கஜானாவாக அனுபவம் செய்வதில் நம்பர்வார் உள்ளனர். பாபா நம்பர்வார் கொடுக்கவில்லை. அனைவருக்கும் நம்பர் ஒன்-ஆகத் தான் கொடுத்திருக்கிறார். ஆனால் காரியத்தில் ஈடுபடுத்துவதில் தனக்குத் தானே நம்பரை உருவாக்கிக் கொள்கிறார்கள். புரிந்ததா, நம்பர் ஏன் உருவாகியுள்ளது என்று? எவ்வளவு பயன்படுத்துகிறீர்களோ, காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களோ, அவ்வளவு அதிகரித்துக் கொண்டே போகும். உள்ளடக்கி

வைத்திருப்பீர்களானால் அதிகரிக்காது. மேலும் தானும் அனுபவம் செய்ய மாட்டீர்கள் என்றால் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்க முடியாது. அதனால் நடத்தை மற்றும் முகத்தில் கொண்டு வாருங்கள். என்ன செய்ய வேண்டுமென்று புரிந்ததா? எந்த நம்பர் வந்தாலும் நல்லது. 108 இல்லை என்றால் 16,000-இல் கிடைக்கட்டும். ஏதோ ஒன்று ஆவோம் இல்லையா? ஆனால் 16,000-இன் மாலை சதா ஜெபிக்கப் படுவதில்லை. எங்காவது, எப்போதாவது ஜெபிக்கிறார்கள். 108-இன் மாலையோ சதா ஜெபித்துக் கொண்டே இருக்கின்றனர். இப்போது நான் யார்? இதை நீங்களே அறிவீர்கள். பாபா சொல்கிறார் அல்லது வேறு யாராவது சொல்கிறார் -- நீங்களோ 16,000-இல் வருவீர்கள் என்றால் என்ன சொல்வீர்கள்? ஏற்றுக் கொள்வீர்களா? கேள்விக்குறி தொடங்கி விடும், ஆகவே தன்னைத்தான் அறிந்து கொள்ளுங்கள், நான் யார்? நல்லது.

நாலாபுறம் உள்ள சர்வ சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, அனைத்து பிறந்த உடனேயே கிடைத்த பரமாத்ம ஜென்மத்திற்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, அனைத்து பாபா மூலம் சிரேஷ்ட ஆஸ்தி மற்றும் பரமாத்ம பாலனை பெறக்கூடிய, சத்தியமான ஆசிரியர் மூலம் சிரேஷ்ட படிப்பின் சிரேஷ்ட பதவி மற்றும் சிரேஷ்ட வருமானத்தைச் சம்பாதிக்கக் கூடிய, சத்குரு மூலம் மகாமந்திரம் மற்றும் அனைத்து வரதானங்களையும் பெறக்கூடிய -- அத்தகைய அதி சிரேஷ்ட பத்மாபதம், ஒவ்வோரடியிலும் பல கோடி மடங்கு சேமிக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

அவ்யக்த பாப்தாதாவுடன் தனிப்பட்ட சந்திப்பு

யதார்த்த சேவை மற்றும் யதார்த்த நினைவின் அடையாளம் -

நிர்விக்னமாக இருப்பது மற்றும் நிர்விக்னமாக ஆக்குவது

சதா தனது சிரேஷ்ட பாக்கியத்தின் பாடல் தானாகவே மனதில் இசைத்துக் கொண்டே இருக்கிறதா? இது அநாதி அவிநாசி பாடல். இதை இசைக்க வேண்டியதில்லை, அது தானாகவே ஒலிக்கும். சதா இந்தப் பாடலை ஒலிக்கச் செய்ய வேண்டும். அதாவது சதா தனது குஷியின் கஜானாவை அனுபவம் செய்ய வேண்டும். சதா குஷியாக இருக்கிறீர்களா? பிராமணர்களின் வேலையே குஷியாக இருப்பது மற்றும் குஷியைப் பகிர்ந்தளிப்பது தான். இதே சேவையில் சதா பிஸியாக இருக்கிறீர்களா? அல்லது எப்போதாவது மறந்தும் விடுகிறீர்களா? மாயா வந்த பிறகு என்ன செய்கிறீர்கள்? எவ்வளவு சமயம் மாயா இருக்கிறதோ, அவ்வளவு சமயம் குஷியின் பாடல் நின்று போகிறது. தந்தையின் துணை சதா இருக்குமானால் மாயா வர முடியாது. மாயா வருவதற்கு முன்னால் பாபாவின் துணையைத் தனிமைப் படுத்தி விடுகிறது, பிறகு போரிடுகிறது. பாபா துணையாக இருந்தால் மாயா நமஸ்காரம் செய்யும். ஆக, மாயாவை நல்லபடியாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் இது விரோதி என்று, பிறகு ஏன் வர விடுகிறீர்கள்? துணையை விட்டு விடுகிறீர்கள் இல்லையா? எனவே மாயாவுக்கு வருவதற் கான வாசல் கிடைத்து விடுகிறது. வாசலுக்கு இரட்டைப் பூட்டு போடுங்கள். ஒரு பூட்டு போதாது. தற்சமயம் ஒரு பூட்டு செல்லுபடியாகாது. ஆக, இரட்டைப் பூட்டு என்பது - நினைவு மற்றும் சேவை.

சேவையும் கூட சுய நலமற்ற சேவை தான் பூட்டு. சுயநலமற்ற சேவை இல்லை என்றால் அந்தப் பூட்டு தளர்வான பூட்டாகிறது. திறந்து கொள்ளும். நினைவும் கூட சக்திசாலியானதாக இருக்க வேண்டும். சாதாரண நினைவு இருந்தாலும் கூட அதைப் பூட்டு எனச் சொல்ல மாட்டார்கள். ஆகவே சதா சோதித்துப் பாருங்கள் - நினைவு இருக்கவே செய்கிறது, ஆனால் அது சாதாரண நினைவா அல்லது சக்திசாலி நினைவா? அது போலவே, சேவை செய்கிறீர்கள், ஆனால் சுயநலமற்ற சேவையா அல்லது ஏதாவது சுயநலம் கலந்துள்ளதா? சேவை செய்தாலும் கூட நினைவில் இருந்து கொண்டே கூட மாயா வருகிறது என்றால் நிச்சயமாக சேவை அல்லது நினைவில் ஏதோ குறை உள்ளது.

சதா குஷியின் பாடலைப் பாடக்கூடிய பாக்கியவான் ஆத்மாக்கள் - இந்த நினைவோடு முன்னேறிச் செல்லுங்கள். யதார்த்த யோகம் அல்லது யதார்த்த சேவை - இவற்றின் அடையாளமே தடையற்று இருப்பது மற்றும் தடையற்றவராக ஆக்குவது. தடையற்றவராக இருக்கிறீர்களா அல்லது அவ்வப் போது தடை வருகிறதா? பிறகு சில நேரம் பாஸாகி விடுகிறீர்கள், சில நேரம் கொஞ்சம் ஃபெயிலாகவும் செய்கிறீர்கள். ஏதாவது பிரச்சினை வருகிறது, அதில் எந்த விதமான ஒரு ஃபீலிங் வருகிறது என்றால் இது ஏன், இது என்ன ஆக, ஃபீலிங் வருவது என்றால் அது தடை. சதா இதை யோசியுங்கள் - வீணான ஃபீலிங்கில் இருந்து விடுபட்டு, ஃபீலிங் ப்ரூஃப் ஆத்மா ஆகிவிட வேண்டும். அப்போது மாயாவை வென்றவராக ஆகி விடுவீர்கள். பிறகும் பாருங்கள் -- பாபாவுடையவர் ஆகி விட்டீர்கள் என்றால் பாபாவுடையவர் ஆவது என்பது எவ்வளவு குஷியின் விஷயம்! ஒரு போதும் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை - பகவானுக்கு இவ்வளவு அருகில் சம்பந்தத்தில் வருவோம் என்று. ஆனால் சாகாரத்தில் ஆகி விட்டோம் (நனவாகி விட்டது). ஆக, எதை நினைவு வைப்பீர்கள்? சதா குஷியின் பாடலைப் பாடுபவர்கள். இந்தக் குஷியின் பாடல் ஒரு போதும் முடிந்து போக முடியாது.

டீச்சர்கள் என்பதன் அர்த்தமே தங்கள் தோற்ற அமைப்பு (ஃபீச்சர்ஸ்-லட்சணங்கள்) மூலம் அனைவருக்கும் ஃபரிஸ்தாவின் தோற்ற அமைப்பை அனுபவம் செய்விப்பவர்கள். அத்தகைய டீச்சர்களா நீங்கள்? சாதாரண ரூபம் காணப்படக் கூடாது. சதா ஃபரிஸ்தா ரூபம் காணப்பட வேண்டும். ஏனென்றால் டீச்சர்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள் இல்லையா? ஆக, யார் நிமித்தமாக ஆகிறீர்களோ, யார் சுயம் அனுபவம் செய்கிறீர்களோ, அவர்கள் மற்றவர்களுக்கு செய்விப்பார்கள். நிமித்தமாகிறீர்கள் என்றால், இதுவும் பாக்கியமாகும். இப்போது இதே பாக்கியத்தை சுயம் அனுபவத்தில் அதிகப்படுத்துங் கள் மற்றும் மற்றவர்களுக்கு அனுபவம் செய்வியுங்கள். அனைத்தை விடவும் விசேஷமான விஷயம், அனுபவி மூர்த்தி ஆகுங்கள்.

வரதானம் : பொறுப்பின் நினைவு மூலம் சதா விழிப்புணர்வுடன் இருக்கக் கூடிய சுப பாவனை, சுப விருப்பம் நிறைந்தவர் ஆகுக.

குழந்தைகள் நீங்கள் இயற்கை மற்றும் மனித ஆத்மாக்களின் விருத்தியை (உள்ளுணர்வு) மாற்றுவதற்குப் பொறுப்புள்ளவர்கள். ஆனால் எப்போது உங்கள் விருத்தி, சுப பாவனை, சுப விருப்பத்தால் நிரம்பப் பெற்றதாக, சதோப்ரதானமாக மற்றும் சக்திசாலியாக ஆகிறதோ, அப்போது தான் பொறுப்பை நிறைவேற்ற முடியும். பொறுப்பின் நினைவு சதா விழிப்புணர்வுள்ளவராக ஆக்கி விடும்.

ஒவ்வோர் ஆத்மாவுக்கும் முக்தி-ஜீவன் முக்தி அளிப்பது, ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குவது என்பது மிகப்பெரிய பொறுப்பாகும். ஆகவே ஒரு போதும் கவனக்குறைவாக ஆகி விடாதீர்கள். உள்ளுணர்வு சாதாரணமானதாக இருக்கக் கூடாது.

சுலோகன்: தனது ஒவ்வொரு கர்மத்தின் மூலம், ஆதரவளிப்பவராகிய பாபாவைப் பிரத்தியட்சம் செய்வீர்களானால் அநேக ஆத்மாக்களுக்குப் பற்றுக்கோடு (பிடிமானம்) கிடைத்துவிடும்.